**உரையாடலை வாசித்துக் கேள்விக்கு விடையளிக.**



பாடம் 7

## நேர்மையோடு வாழ்வோம்

முரளி : தங்கள் வீட்டின் சுவரில் எழுதப்பட்டுள்ள வரிகள் கருத்துள்ளவையாக இருக்கின்றன தாத்தா.

தாத்தா : ஆம் முரளி, வாழ்க்கையில் நேர்மைக் குணம் மிகவும் அவசியம் ஆயிற்றே. அதை முதலில் அண்டை அயலாரோடு செயல்படுத்த வேண்டும்.

முரளி : எப்படித் தாத்தா?

தாத்தா : அண்டை அயலாரோடு எப்போதும் பொய் பேசுதல் கூடாது. அதே நேரத்தில், மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காகக் காரணமே இல்லாமல் புகழ்ந்து பேசுதலும் கூடாது. எப்போதுமே வெளிப்படையாக உண்மையைப் பேசுதலே சாலச்சிறந்தது முரளி.

முரளி : நானும் அதையே கடைப்பிடிப்பேன் தாத்தா.



<u>**கேள்வி**</u>

**அண்டை அயலாரோடு நேர்மையுடன் நடந்து கொள்வதற்குத் தாத்தா கூறும் அறிவுரைகளைப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| | |
| | |
| | |

| | |
|---|---|
| வெளிப்படையாகப் பேசக் கூடாது | மறைத்துப் பேசக் கூடாது |
| வீண்புகழ்ச்சி கூடாது | நேர்மையாக இருக்க வேண்டும் |
| பொய் சொல்லக் கூடாது | உண்மையைப் பேச வேண்டும் |
| நேர்மைதான் வெற்றியின் இரகசியம் | உண்மையைப் பேசக் கூடாது |

LIVEWORKSHEETS